**பழுதில்லாமல் பலன் கொடுக்கும் பாசுமதி!**



பாசுமதி நெற்கதிர்

பாசுமதி நெல்லை விளைவித்திருக்கும் அரியலூர் மாவட்டம், செம்மியக்குடியைச் சேர்ந்த விவசாயி ரமேஷ் இதை முழுக்க முழுக்க இயற்கை முறை விவசாயத்தின் மூலமே சாதித்துக் காட்டியிருக்கிறார்.எனக்கு எட்டு வயதாகிய பொழுதே எனது அப்பா இறந்துவிட்டார். இருக்கின்ற நான்கு ஏக்கரில் விவசாயம் செய்து தான் என் அம்மா என்னை வளர்க்க வேண்டிய கட்டாயம். நான் பத்தாம் வகுப்பு வரை பயின்றேன். பின் முழுமையாக விவசாயத்தில் இறங்கிவிட்டேன். கரும்பு, நெல், வெங்காயம் என்று பருவத்திற்கு ஏற்றது போல், மாற்றி சாகுபடி செய்வேன்.

ஆரம்பத்தில் தோட்டத்தில் விளைந்த கரும்புகளை வெல்லமாக காய்ச்சி விற்றுக்கொண்டிருந்தேன். பக்கத்திலேயே கரும்பு ஆலை வந்துவிடவும் அங்கே கொடுக்க ஆரம்பித்தேன். ஆனால் அது எல்லாம் கட்டுப்படியாகவில்லை. அதனால் கரும்பை விட்டுவிட்டேன்.96 – ம் வருடம் எங்கள் ஊரில் உழவர் மன்றம் தொடங்கினோம். அதன் மூலமாக விவசாயப் பயிற்சிகளில் கலந்து கொள்கிற வாய்ப்பு கிடைத்தது. பிறகு இயற்கை விவசாயப் பயிற்சிகள் கூட்டங்களுக்கும் போக ஆரம்பித்தேன். இயற்கை விவசாயக் கட்டுரைகளையெல்லாம் படித்து தெரிந்துகொண்டு முழுமையான இயற்கை விவசாயத்திற்கு மாறிவிட்டேன். ஒருமுறை நம்மாழ்வாருடைய பயிற்சியில் கலந்து கொண்டபொழுது தான் பாசுமதி ரகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டேன்.

தமிழ்நாட்டில் இதை அதிகமாக யாரும் விளைவிப்பது இல்லை என்று கேள்விப்பட்டவுடனே நாம் அதை விளைவித்துப் பார்த்துவிடனும் என்கிற ஆசை வந்தது. இரண்டு கிலோ விதை நெல்லை தேடிப் பிடித்து வாங்கிவிட்டேன்.போன வருடம் 50 சென்ட் நிலத்தில் ஒற்றை நாற்று முறையில் பாசுமதியை சாகுபடி செய்தேன். 15 மூட்டை (60 கிலோ மூட்டை) விளைச்சல் கிடைத்தது. இப்பொழுது 35 சென்டில் நடவு செய்திருக்கேன். அது அறுவடைக்குத் தயாராக விளைந்து நிற்கிறது.

**மேட்டுப்பாத்தியில் நாற்று!**

பாசுமதி ரக நெல் 130 நாள் வயது கொண்டது. இதற்கு சொர்ணவாரிப் பட்டமும் (மார்கழி, தை), சம்பா பட்டமும் (ஆவணி, புரட்டாசி) ஏற்றது. உவர் மண் தவிர்த்து மற்ற அனைத்து வகை நிலத்திலும் நன்கு வளரும். 20 அடி நீளும், 4 அடி அகலத்தில் மேட்டுப்பாத்தி அமைத்து மண் வெட்டியால் களைகளைக்

கொத்தி பொலபொலப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதில் ஒரு கூடை எருவைச் சேர்த்துக் கிளறி சமப்படுத்தி, ஊறவைத்த இரண்டாம் கொம்பு விதையை விதைக்க வேண்டும் (35 சென்ட் நிலத்திற்கு 2 கிலோ விதை தேவைப்படும்). ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து பூவாளியால் நீர் விட வேண்டும். எட்டாம் நாள் பத்து லிட்டர் நீரில் 300 மில்லி பஞ்சகாவ்யாவைக் கலந்து தெளிக்க வேண்டும். 15 – ம் நாளில் நாற்று தயாராகிவிடும்.

**அடியுரமாக ஆட்டுச் சாணம்!**

நாற்று விட்ட அன்றே, நடவுக்கான நிலத்தையும் தயாரிக்க வேண்டும். நான்கு வண்டி எருவைக் கொட்டிக் களைத்து இரண்டு உழவு செய்ய வேண்டும். பின் தண்ணீர் கட்டி சேறாக மாற்றி வைத்தால் நாற்று தயாராவதற்குள களைகள் அழுகி உரமாகி விடும். நாற்றுவிட்ட அன்றே அடியுரத்திற்காக 50 கிலோ ஆட்டுச்சாணம் 1 கிலோ பாஸ்போ – பாக்டீரியா, 1 கிலோ சூடோமோனஸ், 1 கிலோ அசோஸ்பைரில்லம், 13 லிட்டர் கோமூத்திரம் ஆகியவற்றைக் கலந்து, நிழலில் குவித்து சணல் சாக்கில் மூடி வைக்க வேண்டும். நாற்று தயாரான பின் இதை நிலத்திலிட்டு முக்கால் அடிக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

**கோனோ வீடரில் களையெடுத்தால் அதிக தூர்கள்!**

நடவு செய்த 15, 30, 45 – ம் நாட்களில் நிலத்தில் ஒரு அங்குலம் உயரத்திற்கு தண்ணீர் கட்டி கோனோவீடர் மூலம் களை எடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் பயிரின் பக்க வேர்கள் அறுபட்டு, அதிகத் தூர்கள் பிடிக்கும். 15 – ம் நாள், 10 லிட்டர் நீருக்கு 300 மில்லி பஞ்சகாவ்யாவைக் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். 22 – ம் நாள் தொட்டிக்கு 300 மில்லி வேப்பங்கொட்டைக் கரைசலைக் கலந்து தெளிக்க வேண்டும். இது இலைப்பேன் இலைச்சுருட்டுப் புழு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் (5கிலோ வேப்பங்கொட்டைப் பருப்பை இடித்து, ஆறு லிட்டர் நீரில் 5 நாட்கள் ஊறவைத்து, துணியில் வடிகட்டினால் வேப்பங்கொட்டைக் கரைசல் தயார்).

**சிம்புக்கு 200 மணிகள்!**

30 – ம் நாளில் முட்டை ரசம்; 40 மற்றும் 68 – ம் நாட்களில் மீன் அமிமோஅமிலம்; கதிர் விடும் சமயத்தில், தேமோர்க் கரைசல் ஆகியவற்றை முறையே தெளிக்க வேண்டும். இடையில் குருத்துப்பூச்சித் தாக்கினால் இலுப்பை எண்ணெய் மூலம் அகல் விளக்கேற்றி, விளக்கின் கீழ்ப்பகுதியில் நீரையும் மண்ணெண்ணையும் கலந்து வைத்தால் ஒளியில் பூச்சிகள் கரைப்பட்டு மண்ணெண்ணையில் விழுந்து இறந்து விடும். வேறு பூச்சிகள் தாக்கினால் பூண்டுக் கரைசலைத் தெளிக்கலாம். 105 – ம் நாளிலிருந்து கதிர் முற்ற ஆரம்பித்து 130 – ம் நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும். தூருக்கு 35 முதல் 40 சிம்புகளும் சிம்புக்கு 180 முதல் 200 நெல் மணிகளும் இருக்கும். கதிரின் அடிபாகத்தில் இருக்கும் நெல்மணிகள் இளம் பச்சையாக இருக்கும் சமயத்திலேயே அறுவடை செய்திடல் வேண்டும்.

**மதிப்புக் கூட்டினால் கூடுதல் லாபம்!**

இயந்திரத்தின் மூலம் கதிரடிச்சா, பாசுமதி நெல் அதில் சிக்கிக் கொள்கிறது. இதனால் கையால் அடிப்பதுதான் நல்லது. 35 சென்ட் நிலத்தில் 600 கிலோ நெல் கிடைக்கும். பாசுமதி ரகத்தை ஆறு மாதம் வைத்திருந்து அரிசியாக அரைத்தால் தான் சுவையும், மணமும் கிடைக்கும். இயற்கையில் விளைந்தால் பாசுமதி நெல் என்பதால் கிலோ 21 ரூபாய் 50 பைசா கொடுத்து வாங்கிக்கொள்கிறார்கள். நாமே அரைக்கும்போது 360 கிலோ அரிசி கிடைக்கும். ஒரு கிலோ அரிசி நாற்பது ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரைக்கும் விலை போகும்.

| 35 சென்ட் நிலத்தில் பாசுமதி சாகுபடி செய்ய ஆகும் செலவு – வரவு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| உழவு | 1,000 | |
| விதை நெல் | 80 | |
| நிலம் தயாரிப்பு | 720 | |
| நடவு | 400 | |
| இடுபொருட்கள் | 1,600 | |
| களை | 550 | |
| அறுவடை | 1,300 | |
| அரைக்க | 1,500 | |
| அரிசி மூலம் வரவு | | 14,400 |
| தவிடு மூலம் வரவு | | 1,200 |
| மொத்தம் | 7,150 | 15,600 |
| நிகர லாபம் | | 8,450 |
| 1 கிலோ அரிசி 40 ரூபாய் என்றும், 1 கிலோ தவிடு 5 ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. | | |

சென்ற வருடம் அறுவடை செய்த பாசுமதி நெல் என்னிடம் இருப்பதை ‘பசுமை விகடன் சந்தை’ மூலமாக தெரிந்து கொண்ட ஒரு அமைப்பு அதை அவலாக மாற்றிக் கேட்டார்கள். அதை இடித்தபொழுது 100 கிலோவிற்கு 60 கிலோ அவல் கிடைத்தது. கிலோ ஐம்பது ரூபாய் என்று கொடுத்தேன். நெல்லாக விற்காமல் அரிசியாகவோ, அவலாகவோ மாற்றி விற்கும்போது அதிக லாபம் கிடைப்பதால், மீதமுள்ள நெல்லை அரிசியாக அரைத்து தான் விற்கப்போகிறேன்.

**தொடர்புக்கு:**

திரு. ரமேஷ்,
செம்மியக்குடி,
அரியலூர் மாவட்டம்.
அலைபேசி: 96558 - 38339